**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 208** **நாள்: 05.12.2024**

**சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் - 2025 தொடர்பாக நடைபெற்ற சிறப்பு முகாமில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் உண்மைத்தன்மையினை சென்னை மாவட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் விண்ணப்பித்த வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று இன்று மேலாய்வு மேற்கொண்டார்.**

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் - 2025, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல் தொடர்பாக சிறப்பு முகாமில் பெறப்பட்ட விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் வசதிக்காக 01.01.2025 என்ற நாளை தகுதி நாளாகக் கொண்டு, சிறப்பு முகாம்களை நடத்திட அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கள விசாரணை செய்யப்பட்டது.

கள விசாரணை செய்யப்பட்ட விண்ணப்பங்களை மேலாய்வு செய்திடும் பொருட்டு, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னை மீனாம்பாள்புரம், சிட்டி சென்டர் பகுதியில் விண்ணப்பித்த வாக்காளர்களின் வீடுகளுக்கே வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று வாக்காளர்களின் விண்ணப்பப் படிவத்தின் உண்மைநிலைகள் குறித்து கேட்டறிந்து சான்றுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரித்விராஜ், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.சி.சுரேஷ் மற்றும் சம்பந்தப்பட்ட தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**